DEREK PRINCE
MINISTRIES - INDIA

Free copy!

தேவனுடைய வார்த்தை உங்களுக்கு செய்வதென்ன ?

- பகுதி 4



வளர்ச்சிக்கான ஆகாரம்

நம்முடைய போதனை கடிதங்களில், கடந்த சில மாதங்களாக, ''தேவனுடைய வார்த்தை உங்களுக்காக செய்வது என்ன'' என்ற தலைப்பு கொண்ட, 6 பகுதி போதனையை நாம் கவனித்து வருகிறோம். தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளது; விசுவாசம் எப்படி வரும்; புதிய பிறப்பு என்று நாம் இதுவரை பார்த்த தலைப்புகளின் அடிப்படையில், தேவனுடைய வார்த்தை நம்முடைய வாழ்வில் எவ்வளவு ஆற்றலுடையதாய் இருந்திருக்கிறது என்பதை குறித்து, நாம் ஒவ்வொருவரும் சாட்சி கொடுக்க முடியும்.

கடந்த பகுதியில், ஒரு மனிதன் அனுபவிக்கக்கூடிய மிகப்பெரிய அற்புதமாகிய புதிய பிறப்பை தேவனுடைய வார்த்தை நமக்குள் எவ்வாறு உருவாக்க முடியும் என்பதை தியானித்தோம். அப்போதனையில், தேவனுடைய வார்த்தை ஒரு விதையைப்போன்றது என்று விளக்கினேன். அழியாத அந்த வித்தை நம்முடைய இருதயங்களில் நாம் விசுவாசத்தினால் பெரும்போது, அவ்வித்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் ஒரு முற்றும் புதிய விதமான ஜீவனைக்கொண்டு வருகிறார் என்பதை விளக்கினேன். அந்த புதிய ஜீவனின் பண்புகள், அது தோன்றும் இடமாகிய வித்தின் பண்புகளையே உடையது: அழியாத, நித்திய தெய்வீக ஜீவன். வித்திலிருந்து உண்டாகும் இந்த ஜீவன், இயேசுவின் ஜீவனையும் தன்மையையும் கொண்டது. அவரே ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையாவார்.

ஆகாரமாக வார்த்தை

வார்த்தை, ஜீவனை உண்டாக்கும் வித்தாகும் என்ற சத்தியத்திலிருந்து, நாம் இயற்கையாகவே தேவனுடைய வார்த்தையின் அடுத்த முக்கிய விளைவுக்கு நடத்தப்படுகிறோம். அந்த விளைவு என்ன? புதிய பிறப்பினால் நாம் பெற்றுக்கொண்ட புதிய ஜீவனை நாம் தக்க வைத்துக்கொள்ளவும், பெலப்படுத்தவும் தேவையான ஏற்ற ஆவிக்குரிய ஊட்டச்சத்தை தேவனுடைய வார்த்தையே நமக்கு பகிர்ந்தளிக்கும்.

ஒரு உயிரினம் உலகில் பிறக்கும் போது, அதின் முதன்மையான மற்றும் அவசர தேவைகளில் ஒன்று வாழ்வாதாரம் - இது ஏற்ற ஊட்டச்சத்தின் மூலமே கிடைக்கும். ஒரு மனித குழந்தையின் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். ஒரு குழந்தை மிக அழகான, ஆரோக்கியமான, எல்லா விதத்திலும் குறைவற்ற உயிரினமாக இவ்வுலகில் பிரவேசிக்கலாம். ஆனால் அந்த அழகான குழந்தைக்கு சீக்கிரமாக ஏற்ற ஊட்டச்சத்து கிடைக்கா விட்டால், அது வளர்ச்சியடையாமல் போவது மட்டுமல்லாமல், அது இறந்து விடும். அதுமட்டுமல்ல, அந்த குழந்தைக்கான ஏற்ற ஊட்டச்சத்து, அது வளர்ச்சியின் எந்த கட்டத்தில் உள்ளது என்பதை பொருத்ததாகும். ஒரு குழந்தை முதலாவது பிறக்கும் போது, அதற்கு பால் தேவை. இது மிகவும் அடிப்படையான வகை உணவு. வாழ்க்கையின்

WGWWDFY4 TAMIL.indd 1 9/7/2018 11:15:10 AM

அடுத்தடுத்த கட்டங்களில், ஒரு குழந்தை பெற்றுக்கொள்ளக்கூடிய உணவு வகைகள் மாற்றம் அடைந்துக்கொண்டே வந்து, திட ஆகாரம் தேவைப்படும் கட்டத்தை வந்தடைகிறது.

தேவனுடைய வார்த்தை, ஒரு குழந்தைக்கு தேவைப்படும் உணவை போன்றது. நாம் மறுபிறப்பு அடைந்தவுடன், நமக்குள் உண்டாகும் புதிய ஜீவனை தக்கவைத்துக்கொள்ளவும், பலப்படுத்தவும் தேவன் அளிக்கும் உணவாகும்.

தேவனுடைய வார்த்தை எவ்வளவு அருமையானது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்! அது புதிய பிறப்பை உண்டாக்கும் வித்து மட்டுமல்ல, அந்த புதிய பிறப்பினால், நமக்குள் தோன்றும் புதிய ஜீவனுக்கு ஊட்டமளிக்கும் உணவாகவும் அமைகிறது. தமது வார்த்தையின் மூலம், தேவன் பகிர்ந்தளிக்கும் உணவு, ஒரு மனித குழந்தைக்கு தேவைப்படும் உணவுக்கு சமானமாய் இருக்கிறது. நம்முடைய் ஆவிக்குரிய வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திற்கும் அது ஏற்றதாயிருக்கிறது.

முதல் பால்

நாம் சுட்டிக்காண்பித்ததுப்போல, ஒரு குழந்தைக்கு முதல் தேவைப்படுவது பால். தேவனுடைய வார்த்தை இதையே நமக்களிக்கிறது. நம்முடைய கடைசி பாடத்தில், புதிய பிறப்பை குறித்து பேசும் போது நான் 1 பேதுரு 1:23ஐ குறிப்பிட்டேன்.

> *அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.*

ஒரு சில வசனங்களுக்கு பின்பு - அடுத்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் - ஊட்டச்சத்தை குறித்து பேதுரு தொடர்ந்து பேசுகிறதை பார்க்கிறோம்:

தேவன் வெளியே இருக்க விரும்புகிறவர் அல்ல. அவர் நமக்குள் வர விரும்புகிறார். அவர் நம்முடைய பகுதியாக மாற விரும்புகிறார். இதை அவர் தமது வார்த்தையின் மூலம் செய்கிறார்.

> *இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிப்பார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.*
>
> *1 பேதுரு 2:1 - 3*

"ருசிப்பார்த்து" என்ற வார்த்தையை தேவனோடு சம்பந்தப்படுத்தி பேதுரு இவ்வாறாக பேசுவது, வரவேற்கத்தக்கது. நாம் ஏதோ ஒன்றை ருசிப்பார்க்கும் போது, அதை நமக்குள் கொண்டு செல்கிறோம். அது நமக்குள் ஒரு பகுதியாகி விடுகிறது. சிந்தித்தித்து பாருங்கள். ஏதோ ஒன்று, நம்முடைய பகுதியாக மாறாமலேயே, நாம் அதை பார்க்கலாம், தொடலாம் அல்லது கேட்கலாம். ஆனால் ஒன்றை ருசிப்பார்க்கும் போது, அது நம்முடய பங்காக மாறிவிடுகிறது.

இப்படியாக தான் தேவன் நம்முடைய ஜீவனுக்குள் வர விரும்புகிறார். வெளியே இருக்கும் ஒன்றை போல, அவர் வெளியே இருக்க விரும்புகிறவர் அல்ல. அவர் நமக்குள் வர விரும்புகிறார். அவர் நம்முடைய பகுதியாக மாற விரும்புகிறார். இதை அவர் தமது வார்த்தையின் மூலம் செய்கிறார்.

ஆகவே, நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்திற்கு, நம்மை வளர செய்கின்ற தூய்மையான பாலை தேவனுடைய வார்த்தை கொண்டிருக்கிறது. ஆனாலும், 1 பேதுரு 2:1ல் கொடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். நாம் அறிந்திருக்கிறது போல், பால் எளிதாக கெட்டுப்போக கூடிய ஒன்று. தவறான சூழ்நிலைகள் அதை கெட்டுப்போக செய்யும். உதாரணத்திற்கு, குழந்தையின் பால் புட்டியில் கிருமிகள் இருந்தாலோ, அல்லது அவர்கள் வயிற்றில் அமிலம் அதிகம் இருந்தாலோ, அந்த பால் கெட்டுப்போய் விடும். அது குழந்தைக்கு நல்லதல்ல.

தேவனுடைய வார்த்தையென்னும் பாலை கெட்டு போக செய்யும் காரணிகளை குறித்து, பேதுரு நம்மை எச்சரிக்கின்றார். இவை, அந்த பாலை நமக்கு பிரயோஜனமற்றதாக மாற்றி விடுகின்றன. ஐந்து கிரியைகளை நாம் அகற்ற வேண்டும் என அவர் கூறுகிறார்: துர்க்குணம், கபடு, வஞ்சகம், பொறாமை மற்றும் புறங்கூறுதல். உங்களை பலனுள்ளவர்களாய் மாற்ற அவசியமான பாலை, தேவனுடைய வார்த்தையிலிருந்து நீங்கள் பெறும்போது, அந்த வார்த்தையென்னும் பாலை கெட்டு போக செய்யும் எந்த காரியங்களையும், உங்கள் இருதயத்தினுள் அனுமதிக்க கூடாது என்பதை மனதில் கொள்ளுங்கள். துர்க்குணம், கபடு, வஞ்சகம், பொறாமை மற்றும் புறங்கூறுதலை அகற்றுங்கள்.

அப்பத்திற்கு கடந்து போகுதல்

நாம் பாலை தொடர்ந்து உட்கொண்டு வருகையில், என்ன நடக்கின்றது? நாம் அடுத்து அப்பத்திற்கோ, தானியங்களுக்கோ கடந்து போகிறோம். அதிசய விதமாக, தேவனுடைய வார்த்தை, அவ்விதமான ஊட்டச்சத்தையும் நமக்கு அளிக்கிறது. மத்தேயு 4:4ல், இயேசு சொன்னார்:

மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே...

இயற்கையின் சூழலில் எப்படி அப்பம் நமக்கு உட்டமளிக்கின்றதோ, ஆவிக்குரிய சூழலில், தேவனுடைய வார்த்தை ஊட்டமளிக்கிறதென்று நாம் காண்கிறோம். தேவனுடைய வார்த்தையாகிய அந்த அப்பத்தை கொண்டே, நாம் வாழ வேண்டும் என்று இயேசு கூறுகிறார்.

மூல கிரேக்க பாஷையில், இங்கு, "தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையின் படியே" என்று குறப்பட்டுள்ளது. இவ்வார்த்தையின் சாராம்சத்தை கவனித்தால், தேவனோடு தொடரும் ஒரு தொடர் உறவை அது குறிக்கின்றது. இது எப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை சித்தரிக்கிறது என்றால், அவர் வாயிலிருந்து வார்த்தை வெளிவரும் போதே அதை பெற்றுக்கொள்ளக்கூடிய

ஒரு நெருக்கமான தொடர்பை சித்தரிக்கிறது. "ஒவ்வொரு வார்த்தை" என்று இயேசு இவ்வசனத்தில் கூறுவதை நமது மனதில் கொள்வோம். இது முழு வேதாகமத்தையும் குறிக்கின்றது. அங்கும் இங்குமாக சில வசனத்துணிக்கைகளை கொண்டு நாம் வாழ முடியாது. நாம் முழு வேதாகமத்தையும் அறிந்துக்கொள்ள வேண்டும்.

2 தீமோத்தேயு 3:16, இவ்வாறாக கூறுகின்றது:

> *வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; ......அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துக்கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும்பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.*

ஆகவே, நீங்கள் வளர்ச்சியடைய வேண்டுமானால், நீங்கள் உங்கள் முழு வேதாகமத்தையும் அறிந்துக்கொள்ள வேண்டும் என்பதை உங்கள் மனதில் கொள்ளுங்கள் - வெறும் நான்கு சுவிசேஷங்கள் அல்லது ஒரு சில சங்கீத பகுதிகளை மட்டுமல்ல. சகரியா, எசேக்கியேல் மற்றும் மல்கியா போன்ற அருமையான புத்தங்களை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். இந்த புத்தகங்கள் எங்கு இருக்கின்றன எனவும், அவைகள் என்ன கூறுகின்றன எனவும் அறிந்துக்கொள்ளுங்கள். நீங்கள் எப்படிப்பட்ட கிறிஸ்தவர்களாய் இருக்க வேண்டுமோ, அப்படிப்போல உங்களை மறுரூபப்படுத்த தேவையான ஊட்டச்சத்தையும் பெலனையும் அவைகளுக்குள் நீங்கள் கண்டடையலாம் என்பதை மறந்து போகாதீர்கள்.

திடமான மாமிச உணவு

தேவனுடைய வார்த்தை பாலையும், அப்பத்தையும் கொடுக்கின்றது என்ற உண்மையை நாம் தியானித்தோம். ஆனால் அப்பமும் பாலும் மட்டும் சீரான உணவாகாது என்றும் நாம் அறிவோம். தன்னில் தானே, இவை இரண்டும் பூரண ஆகாரம் ஆகாது. இப்போது நாம் ஆராய போவது, திட உணவு. நம்முடைய முழு ஆகார திட்டத்தில், வேதம் திட உணவை குறித்து என்ன சொல்கிறதென்று நாம் காணலாம். எபிரெயர் 5:12 - 14ல் காணப்படும் பகுதியை எடுத்து, நாம் ஆரம்பம் செய்யலாம்:

> *காலத்தைப்பார்த்தால் போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.*

எபிரேயரின் எழுத்தாளரின் கடிதத்தை வாசிக்கும் கிறிஸ்தவர்களை போல நாமும் இருக்கக்கூடும் என்பதை கவனியுங்கள். அவர்களை பார்த்து, "இந்நேரத்திற்கு நீங்கள் முதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும். நீங்கள் திட ஆகாரத்தை பெற்றுக்கொள்ளக்கூடியவர்களாய் மாறியிருக்க வேண்டும். ஆனால் இன்னமும் சிறு குழந்தைகளை போலவே வாழ்கிறீர்கள் என்பது தான் உண்மை. இங்கும் அங்குமாக சில வேத பகுதிகளையே எடுத்துக்கொள்ளுகிறீர்கள். நீங்கள் உண்மையில் முதிர்ச்சி அடையவே இல்லை." என்று கூறுகிறார்.

இந்த ஆவிக்குரிய நிலையைக் குறித்து பேசுகிற எபிரெயரின் எழுத்தாளர், முதிர்ச்சியடைய விரும்பும் எல்லா கிறிஸ்தவர்களும் எடுக்க வேண்டிய ஒரு அத்தியாவசிய படியை விவரிக்கின்றார். "பலமான ஆகாரம்....பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" என்று அவர் கூறும் போது, அதினோடு இவ்வாக்கியத்தையும் இணைக்கிறதை காண்கிறோம்: "நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களை உடையவர்கள்" (வசனம் 14.) வளர்ச்சியடைய பயிற்சி தேவை. உங்கள் ஆவிக்குரிய புலன்களை நீங்கள் பயிற்றுவிக்க வேண்டும். நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் பகுத்தறியவேண்டும்.

வளர்ச்சியடைய பயிற்சி தேவை. உங்கள் ஆவிக்குரிய புலன்களை நீங்கள் பயிற்றுவிக்க வேண்டும். நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் பகுத்தரிய வேண்டும்.

மிக சத்தம்போட்டு பேசும் எந்த பிரசங்கியாருக்கும் "ஆமேன்" என்று கூறும் சில கிறிஸ்தவர்கள் உண்டு. அப்படிப்பட்ட நடிப்பு திறனை சிலர் ஆன்மீகத்தின் அடையாளமாக கருதுகின்றனர். என்னை பொருத்த மட்டில், பிரசங்கியார் என்ன சொல்லுகிறாரோ, அதற்கு ஒப்புதல் இருந்தால் மட்டுமே நான் 'ஆமேன்' சொல்லுவேன். அவர் எவ்வளவு சத்தமாக பேசினாலும் சரி , தேவனுடைய வார்த்தையுடன் அவர் வார்த்தைகள் ஒத்திருந்தால் மட்டுமே நான் "ஆமேன்" சொல்லுவேன். என்னுடைய

உங்கள் கவனத்திற்கு !!

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி *secretary@derekprince.in* அல்லது அலைபேசி *9585538202* தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில் பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.

உங்கள் விலாசம் மாறும்பொழுது தயவு செய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

இன்னும் தேவையா ?

◯ ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.

◯ தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.

◯ முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்

See over for address details...

பதிவு செய்க !

◯ தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.

◯ ஈமெயில் மூலமாக அனுப்பவும்.

◯ கடிதம் மூலமாக அனுப்பவும்

ISSUE #006

புலன்களை பயிற்றுவிக்க, என்னால் இயன்றமட்டும் சிறந்ததை செய்திருக்கிறேன். நான் தேவனுடைய வார்த்தையைக்கொண்டு அநேகம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறேன், ஆகையால் என்னை எளிதாக ஏமாற்ற முடியாது.

தேவனுடைய கிருபையினால், நான் பாலையும் அப்பத்தையும் கடந்து வந்திருக்கிறேன் என சாட்சி கூற முடியும். திட ஆகாரமாக தேவனுடைய வார்த்தையை என்னால் கைக்கொள்ள முடியும். நான் ஏதோ விசேஷித்தவன் என்பதினால் அல்ல, நான் தேவனுடைய நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்கிறேன். நான் பயிற்சி செய்திருக்கிறேன். என் புலன்களை பயிற்றுவித்திருக்கிறேன். நான் வேதத்தில் வாழ்ந்துள்ளேன், அதை நடைபோட்டிருக்கிறேன். அதை ஆராய்ந்து பார்த்திருக்கிறேன், ஜெபித்திருக்கிறேன், அதனை மற்ற வர்களுடன் பகிர்ந்திருக்கிறேன். தேவனுடைய வார்த்தை என க்குள் திட ஆகாரமாயிருக்கிறது.

குன்றிய வளர்ச்சி

முதிர்ச்சிக்கான இப்பாதையை கண்டுபிடித்த நான், வேதனையுடன் கூறவேண்டிய காரியம் என்னவென்றால், ஒரு மாற்று வழி உண்டு. ஆனால் இது துயர்நிறைந்த ஒரு மாற்றுவழி. ஒரு சிறு குழந்தை உலகத்தில் பிறக்கும் போது "எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று கூறுகிறோம். அதின் குழந்தைத்தனத்தை நேசிக்கிறோம். அது கொஞ்சிப்பேசும் அர்த்தமற்ற வார்த்தைகளை நேசிக்கிறோம். அந்த குழந்தை தெளிவாக பேச வேண்டுமென்றோ, ஞானமான முடிவுகளை செய்ய வேண்டுமென்றோ, வாழ்க்கையின் பிரச்சனை களை எதிர்கொள்ள வேண்டுமென்றோ நாம் எதிர்ப்பார்ப்பதில்லை.

காரணம், அது இன்னும் ஒரு குழந்தை தான் - அது அழகாகவும், நேசிக்கத்தக்கதுமாய் இருப்பதால் அதின் குழந்தைத்தனத்தை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் வருஷங்கள் உருண்டோட, அதே நிலையில் அக்குழந்தை தொடர்கிறதென்று வைத்துக்கொள்வோம். குழந்தையாய் இருந்த போது அழகாகவும் நேசிக்கத்தக்கதுமாய் இருந்த அதே குணங்கள் வளர்ச்சியடைந்த பின்னும் தொடர்ந்தால், ஆபத்தாகி விடுகின்றன. அதை குன்றிய அல்லது தடைசெய்யப்பட்ட வளர்ச்சியென்று அழைப்போம்.

ஆனால் வேதனைக்குறிய விஷயமாக, அநேக கிறிஸ்தவர்களின் வாழ்வில், இந்த தடைசெய்யப்பட்ட வளர்ச்சியையே காண்கிறோம். அநேக ஆண்டுகளாக கிறிஸ்தவர்களாய் இருந்தும் அவர்கள் இன்னும் பாலை கொண்டே வாழ்கின்றனர். அவர்கள் இன்னும் குழந்தைகளாகவே இருக்கின்றனர். நன்மை தீமையை பகுத்தறிய முடியாதவர்கள். தங்கள் புலன்களை பயிற்றுவித்ததில்லை. ஒழுங்குப்படுத்தப்படாத நடத்தையின் விளைவாக, வஞ்சிக்கிற வர்களுக்கு அவர்கள் எளிய இரையாக மாறி விடுகின்றனர். உயர் இறையியல் பாஷைக்கொண்டு பேசுகிறவர்களை காணும்போதோ, கூச்சலிட்டு பேசும் மேடை பேச்சாளர்களை கேட்கும்போதோ, அவர்கள் பேச்சு வசனத்திற்கு மாறாக இருந்தாலும், இவர்கள் எளிதாக வழித்தவறி செல்கின்றனர்.

அப்படிப்பட்ட ஒரு குழந்தையை நீங்கள் உங்கள் மனக்கண் முன் நிறுத்துங்கள். அச்சித்திரம் எவ்வளவு துயர்நிறைந்தது என்பதை நீங்கள் புரிந்துக்கொள்ள வாஞ்சிக்கிறேன். அந்த துயர் நிறந்த சித்திரத்திற்கான மாற்றுமருந்தை எபேசியர் **4:14**ல் நாம் காண்கிறோம். அவ்வசனத்திற்கு முன்பு, தேவனுடைய வார்த்தை மற்றும் ஊழியக்காரர்களின் ஒழுங்கின் கீழ் வருவதின் அவசியத்தை குறித்து பவுல் பேசிக்கொண்டிருக்கிறார். கிறிஸ்துவின் சரீரத்தில் இயங்கும் ஒரு அவயவமாக மாற வேண்டிய அவசியத்தை குறித்து பேசிக்கொண்டிருக்கிறார். இந்த நிபந்தனை களை நிறைவேற்றினால், அலைகளால் அங்கும் இங்குமாக அலசடிப்படும் குழந்தைகளைப்போல் நாம் இருப்பதில்லை என்று கூறுகிறார். பல போதனைகளின் காற்றுகளினாலோ, மனிதருடைய சாதுரியத்தினாலோ, ஏமாற்றத்தினாலோ அவர்களுடைய வஞ்சக திட்டங்களினாலோ நாம் இங்கும் அங்கும் வீசப்படுவதில்லை.

முடிவாக, ஒரு குழந்தையாகவே அங்கும் இங்கும் அலசடிப்பட்டு, எப்போதும் வஞ்சகத்துக்கு திறந்திருந்து, முதிர்ச்சி அல்லது நிலைவரப்பட்ட வாழ்வை அடையாத ஒரு நிலையில் நீங்கள் இருக்க விருப்பமில்லாதவர்களாய் இருந்தால் - நீங்கள் தேவனுடைய வார்த்தையின் திட ஆகாரத்தை கொண்டு வாழவேண்டும். நீங்கள் பாலை கொண்டு ஆரம்பித்து, அப்பத்திற்கு கடந்து போகிறீர்கள். ஆனால் முடிவில், தேவனுடைய வார்த்தையின் திட ஆகாரத்தை உண்ணும்படி முன்னேறுகிறவர்களாக திட்டம் பண்ணுங்கள்.

இந்த செயல் தொடரில், நீங்கள் தனிப்பட்ட விதத்தில் முன்னேற வேண்டிய அவசியத்தை அங்கிகரிக்கிறீர்களா? அப்படியானால், இப்பகுதியின் முடிவுக்கு நாம் வந்திருக்கும் நிலையில், இதனை ஒரு ஜெபமாக அறிவிப்போமா?

தேவனே, நான் உமக்கும், உம்முடைய
வார்த்தைக்கும் பின் செல்லும் முதிர்ச்சியடந்த
நபராக இருக்க விரும்புகிறேன்.
பால் மற்றும் அப்பத்தை கடந்து,
உம்முடைய வார்த்தையில் எனக்கென்று
கொடுக்கப்பட்டுள்ள திட ஆகாரத்திற்கு கடந்து
போக எனக்கு உதவி செய்யும்.
முதிர்ச்சியை நான் விரும்புகிறேன்.
உம்முடைய வார்த்தை நான் வளர்ச்சியடைவதற்கான
ஆகாரத்தை எனக்கு தரும்.
உம்முடைய கிருபையினாலே,
இதை பின் தொடர என்னை அர்ப்பணிக்கின்றேன்.
ஆமென்.

TAKEN FROM THE DEREK PRINCE LEGACY RADIO SERIES
"WHAT GOD'S WORD WILL DO FOR YOU." - Part 4 of 6

உங்கள் விபரம்

பெயர் ....

விலாசம்: ....

....

தொலைபேசி: .... பின்கோடு: ....

இமெயில்: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538205
1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017